Maalai Malar
மாலை மலர்
15/03/2018
Page # 05



## சூர்யோதய் சிறு நிதி வங்கி கிளை

சிறு நிதி வங்கித் துறையில் வளர்ந்துவரும் சூர்யோதய் சிறு நிதி வங்கி முன்னாள் வங்கியாளர்களை பங்காளர்களாக கொண்டு, முதல் வங்கிக் கிளையினை சென்னையில் தொடங்கியுள்ளது. இவ்வங்கியின் மேலாண் இயக்குனர் பாஸ்கர் பாபு இக் கிளையை திறந்து வைத்தார். சேமிப்பு கணக்குகளுக்கு 7.25%, நிரந்தர வைப்பு நிதிக்கு 8.75%, முதியோர் வைப்பு நிதிக்கு 9% வட்டியினை வழங்குகிறது. ரூ.500 கோடிக்கும் மேற்பட்ட வைப்புத் தொகை இருப்பு, ரூ.1352 கோடி அளவுக்கு கடன் வழங்கள், ஆண்டு வளர்ச்சி வீதம் 37% என திடமான நிலையில் வங்கி உள்ளது.